**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 18.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 7950/E/2018**

திரு P.பாண்டி செல்வராஜ் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம். . ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 31.07.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 15.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 24.10.2018 |

******

**ஆணை**

இன்று (18.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு P.பாண்டி செல்வராஜ் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி அ.ஷோபா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) (பொ), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் திரு பி.கமலக்கண்ணன், துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் 31.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தான் 18.06.2018 அன்று அளித்த வாலாஜாபாத் தாலுகா, புத்தகரம் கிராமத்தில் 78/1C சர்வே எண். நிலத்தில் முறைகேடாகப் பட்டா உட்பிரிவு செய்யப்பட்டதை ரத்து செய்ய அளிக்கப்பட்ட புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய தகவல், 01.11.2017 அன்று மேற்படி கிராமத்தில் முறைகேடாகப் பட்டா உட்பிரிவு செய்யப்பட்டதை ரத்து செய்ய வேண்டி பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட புகார் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விபரம், மேற்படி முறைகேடாகப் பட்டா உட்பிரிவு செய்யப்பட்டதை விசாரணை நடத்தி ரத்து செய்ய உத்திரவிடக் கோரி, முதலமைச்சர் சிறப்புப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட புகாரின் அடிப்படையில் குறிப்பாணை ஏதும் கிடைக்கப்பெற்றிருக்கிறதா என்ற விபரம் என 3 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை அனுப்புமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 15.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையிட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தருமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 24.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (18.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள 18.06.2018 தேதியிட்ட மனுவானது உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு 22.06.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக, காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென்றும், மேற்படி விபரம் 14.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்குத் தகவலாக வழங்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலை ஆணையம் ஏற்றுக் கொள்கின்றது. விசாரணையின்போது மேல்முறையீட்டாளர், தான் இனம்

3-ல் கோரியுள்ள முதலமைச்சரின் சிறப்புப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட புகாரின் அடிப்படியில் விசாரித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் குறிப்பாணை ஏதும் கிடைக்கப்பட்டிருக்கிறதா என்ற தகவல் வழங்கப்படவில்லையென்றும், மேற்படி தகவலை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் கோரினார். மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஆணையம் ஏற்று, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 31.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் இனம் 3-ல் கோரியுள்ள முதலமைச்சரின் சிறப்புப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட புகாரின் அடிப்படியில் விசாரித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் குறிப்பாணை ஏதும் கிடைக்கப்பட்டிருக்கிறதா என்ற தகவலை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 7950/E/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**மனுதாரர்**

திரு P.பாண்டி செல்வராஜ்,
பிளாட் நெ.89, A.V.S. மெயின் ரோடு,
அன்னை நகர்,
கொரட்டூர்,
சென்னை - 600 076.

Copy to: Judgement File.
24/09/19